**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 109/2020 |
| Name | : Pasupathiraj |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் உடையார்பாளையத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 14.07.2019ம் தேதி காலை 10.30 மணிக்கு உடையார்பாளையம் காமாட்சியம்மன் ஸ்வீட் கடை முன்பு நானும், சிவக்குமாரும் நின்று பேசிக்கொண்டிருந்தோம். கிழக்கிலிருந்து மேற்காக எனது மாமா சுப்பிரமணியம் TVS SUPER XL வாகனத்தில் வந்து வெற்றி நகருக்கு செல்வதற்காக வலது பக்கம் திரும்பினார் அப்போது மேற்கிலிருந்து வந்த வெள்ளை நிற Benz கார் வந்து எனது மாமா வாகனத்தில் மோதியது அதில் எனது மாமா தூக்கி வீசப்பட்டார். நானும், சிவக்குமாரும் சென்று அவரை தூக்கி உட்கார வைத்தோம். அவர் சுயநினைவில் இல்லை. ஆஜர் எதிரி தான் வெள்ளை நிற Benz காரை ஓட்டி வந்தார். ஆம்புலன்ஸ் மூலம் எனது மாமாவை உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். மருத்துவர் இறந்துவிட்டதாக சொன்னார். நானும், சிவக்குமாரும் போலீசாருக்கு தகவல் சொன்னோம். போலீசார் மருத்துவமனைக்கு வந்து பிரேதத்தை விசாரித்தார்கள்.இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) தற்போது முதல் விசாரணையில் சொன்ன தகவல் போலீசார் சொன்னபடி சொன்னேன் என்றால் சரியல்ல. அ.சா.1 சிவக்குமார் எனது நண்பர். இறந்து போன சுப்பிரமணியம் எனது மாமா. 2019 ம் வருடம் நான் வெல்டிங் வேலை செய்து வந்தேன். காரத்தொழுவு நான்கு ரோடு சுங்கம் அருகில் வெல்டிங் ஒர்க் ஷாப் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் நானும், சிவக்குமாரும் சம்பவத்தை கேள்விப்பட்டு தான் அங்கு சென்றோம் என்றால் சரியல்ல நான் அந்த இடத்தில் இருந்தேன். அ.சா.1 எனது நண்பர் என்பதால் பெய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் கடையில் வேலை செய்து வந்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 109/2020 |
| Name | : Gowthamraj |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் காரத்தொழுவில் வசித்து வருகிறேன். தேங்காய் உரிக்கும் வேலை செய்கிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு மதியம் 01.30 மணியளவில் காமாட்சியம்மன் ஸ்வீட் கடை எதிரில் போலீசார் விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் உதயபிரகாஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இறந்து போன சுப்பிரமணியம் எனது உறவினர் என்றால் தெரிந்த நபர். விபத்து சம்மந்தமாக நான் சிவக்குமாருடன் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. விபத்து மற்றும் வரைபடம் வரைந்தது சம்மந்தமாக எழுதியிருந்தது. அ.சா.1

எனக்கு நண்பர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்